No. of Printed Pages : **12**

# 4192 (NS)

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

## வரலாறு / HISTORY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

### பகுதி - I/PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. ''சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்'' – எனக் கூறியவர் :

(அ) பாலகங்காதர திலகர் (ஆ) தாதாபாய் நௌரோஜி

(இ) சுபாஷ் சந்திர போஸ் (ஈ) பாரதியார்

'Swaraj is my birth right and I shall have it' was said by :

(a) Bala Gangadhar Tilak (b) Dadhabhai Naoroji

(c) Subash Chandra Bose (d) Bharathi

2. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன் மொழியப்பட்டது ?

(அ) அரவிந்த கோஷ் (ஆ) தாதாபாய் நௌரோஜி

(இ) ஃபெரோஸ் ஷா மேத்தா (ஈ) லாலா லஜபதி ராய்

Whose name was proposed as president by militant nationalists for the Surat Session of the Congress ?

(a) Aurobindo Ghose (b) Dadhabhai Naoroji

(c) Pherozesha Mehta (d) Lala Lajpat Rai

3. **கூற்று** : வ.உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

**காரணம்** : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.

(அ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி. **காரணம்** கூற்றை விளக்குகிறது.

(ஆ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி. ஆனால் **காரணம்** கூற்றை விளக்கவில்லை.

(இ) **கூற்று** சரி; **காரணம்** தவறு.

(ஈ) **கூற்று** தவறு; **காரணம்** சரி.

**Assertion (A) :** V.O. Chidambaram established a Swadeshi Steam Navigation Company.

**Reason (R) :** He wanted to oppose the monopoly of the British in navigation through the coast.

(a) **(A)** and **(R)** are true and **(R)** is the correct explanation of **(A)**.

(b) **(A)** and **(R)** are true and **(R)** is not the correct explanation of **(A)**.

(c) **(A)** is correct and **(R)** is wrong.

(d) **(A)** is wrong and **(R)** is correct.

4. ''Indian Unrest'' என்ற புத்தகத்தின் ஆசிரியர் :

(அ) லாலா லஜபதி ராய் (ஆ) வேலண்டைன் சிரோலி

(இ) திலகர் (ஈ) அன்னிபெசன்ட்

The author of the book 'Indian Unrest' was :

(a) Lala Lajpat Rai (b) Valentine Chirol

(c) Tilak (d) Annie Besant

5. அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார் ?

(அ) பி.பி. வாடியா (ஆ) ஜவஹர்லால் நேரு

(இ) லாலா லஜபதி ராய் (ஈ) சி.ஆர். தாஸ்

Who was the President of the First All India Trade Union Congress ?

(a) B.P. Wadia (b) Jawahar Lal Nehru

(c) Lala Lajpat Rai (d) C.R. Das

6. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது ?

(அ) 1920 (ஆ) 1925 (இ) 1930 (ஈ) 1935

Communist Party of India was formed in the year :

(a) 1920 (b) 1925 (c) 1930 (d) 1935

7. மார்ச் 1931-இல் நடந்த கராச்சி அமர்வு __________ தலைமையில் நடந்தது.

(அ) சூரியா சென் (ஆ) சர்தார் வல்லப்பாய் படேல்

(இ) ஜதீந்திரநாத் தாஸ் (ஈ) கல்பனா தத்

The Karachi session held in March 1931 was presided over by __________.

(a) Surya Sen (b) Sardar Vallabhbhai Patel

(c) Jatindra Nath Das (d) Kalpana Dutt

8. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு :

(அ) 1852 (ஆ) 1854 (இ) 1861 (ஈ) 1865

The First Cotton Mill in Bombay was started in :

(a) 1852 (b) 1854 (c) 1861 (d) 1865

9. லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம் பெற்ற முதல் இந்தியர் ________.

(அ) ரஹமத்துல்லா சயானி (ஆ) சர் சையது அகமது கான்

(இ) சையது அமீர் அலி (ஈ) பத்ருதீன் தயாப்ஜி

The First Indian to find a place in London Privy Council :

(a) Rahmatullah Sayani (b) Sir Syed Ahmed Khan

(c) Syed Ameer Ali (d) Badruddin Tyabji

10. எப்போது முஸ்லீம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது ?

(அ) 25 டிசம்பர், 1942 (ஆ) 16 ஆகஸ்ட், 1946

(இ) 21 மார்ச், 1937 (ஈ) 22 டிசம்பர், 1939

Direct Action Day was organised by the Muslim League on :

(a) 25 December, 1942 (b) 16 August, 1946

(c) 21 March, 1937 (d) 22 December, 1939

11. **கூற்று :** ஜமீன்தாரி முறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியையே எட்டியது.

**காரணம் :** பல நிலச்சுவான்தாரர்கள் குத்தகைகாரர்களை வெளியேற்றி நிலம் அவர்களது சுயகட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினர்.

(அ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி. **காரணம்** கூற்றை விளக்குகிறது.

(ஆ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி. **காரணம்** கூற்றை விளக்கவில்லை.

(இ) **கூற்று** சரி, **காரணம்** தவறு.

(ஈ) **கூற்று** தவறு, **காரணம்** சரி.

**Assertion (A) :** Zamindari abolition achieved only a part of the original objective.

**Reason (R) :** Many Zamindars managed to evict their tenants and claim that the land was under their personal cultivation.

(a) Both **(A)** and **(R)** are true and **(R)** is the correct explanation of **(A)**.

(b) Both **(A)** and **(R)** are true and **(R)** is not the correct explanation of **(A)**.

(c) **(A)** is true but **(R)** is false.

(d) **(A)** is false but **(R)** is true.

12. நெப்போலியன் முதன்முறை நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்ட இடம் __________ ஆகும்.

(அ) எல்பா (ஆ) செயின்ட் ஹெலனா

(இ) கார்சிகா (ஈ) வாட்டர்லூ

Napoleon was exiled first time to __________.

(a) Elba (b) St. Helena

(c) Corsica (d) Water Loo

13. ''இரு உலகங்களின் நாயகன்'' என கொண்டாடப்பட்டவர் __________ ஆவார்.

(அ) சார்லஸ் ஆல்பிரட் (ஆ) பிஸ்மார்க்

(இ) மூன்றாம் நெப்போலியன் (ஈ) கரிபால்டி

__________ was called the "Hero of Two Worlds".

(a) Charles Albert (b) Bismarck

(c) Napoleon III (d) Garibaldi

14. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத ஒன்றைச் சுட்டுக.

(அ) விடுதலை ஆணை - இரண்டாம் அலெக்ஸாண்டர்

(ஆ) இரத்த ஞாயிறு - இரண்டாம் நிக்கோலஸ்

(இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரங்கள் - முதலாம் நிக்கோலஸ்

(ஈ) பிரெஸ்ட் - லிடோவ்ஸ்க் உடன்படிக்கை - மூன்றாம் அலெக்சாண்டர்

Which one of the following is not correctly matched ?

(a) Edict of Emancipation - Alexander II

(b) Bloody Sunday - Nicholas II

(c) 500 Serf Riots in Russia - Nicholas I

(d) Treaty of Brest-Litovsk - Alexander III

15. ஹிட்லரை ஜெர்மனியின் பிரதம அமைச்சராக நியமித்தவர் யார் ?

(அ) ஜெனரல் லூடன்டார்ஃப் (ஆ) வான் ஹிண்டன்பர்க்

(இ) ஜெனரல் ஸ்மட்ஸ் (ஈ) ஆல்ஃபிரட் வான் பெத்மன்

Who designated Hitler as the Chancellor of Germany ?

(a) General Ludendorff (b) Von Hindenburg

(c) General Smuts (d) Alfred Von Betmann

16. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவைச் சந்தித்தது __________ என்னுமிடத்தில் ஆகும்.

(அ) போட்ஸ்டாம் (ஆ) எல் அலாமின்

(இ) ஸ்டாலின்கிராட் (ஈ) மிட்வே

German forces suffered their first reverses at :

(a) Potsdam (b) El Alamein

(c) Stalingrad (d) Midway

17. நீண்ட பயணம் 1934 உடன் தொடர்பு உடையவர் __________.

(அ) சியாங்க்-கே-ஷேக் (ஆ) சன் யாட் சென்

(இ) மா சே துங் (ஈ) யுவான் ஷி-காய்

Person associated with Long March of 1934 :

(a) Chiang Kai Shek (b) Sun Yat Sen

(c) Mao Tse Tung (d) Yuan Shih Kai

18. ட்ரூமன் கோட்பாடு __________ பரிந்துரைத்தது.

(அ) கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்கான நிதியுதவி

(ஆ) காலனிகளிலுள்ள கிளர்ச்சியாளர்க்கு ஆயுதங்கள் வழங்குவது

(இ) கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது

(ஈ) அமெரிக்கத் தளபதியின் தலைமையின் கீழ் ஐ.நா. சபைக்கு நிரந்தரப் படையை உருவாக்குவது

Truman doctrine advocated __________.

(a) Financial aid to stop the spread of communism

(b) Supply of weapons to the insurgents in colonies

(c) Interference in internal affairs of east European countries

(d) Permanent army to UN under US commander

19. ''மூன்றாம் உலகம்'' எனும் பதத்தை உருவாக்கியவர் __________ ஆவார்.

(அ) ஆல்பிரட் சாவே (ஆ) மார்ஷல்

(இ) மோலோடோவ் (ஈ) ஹாரி ட்ரூமன்

The term "Third World" was coined by __________.

(a) Alfred Sauvy (b) Marshall

(c) Molotov (d) Harry Truman

20. சூயஸ் கால்வாய் செங்கடலை __________ இணைக்கிறது.

(அ) ஏடன் வளைகுடாவுடன் (ஆ) காம்பே வளைகுடாவுடன்

(இ) மத்தியதரைக் கடலுடன் (ஈ) அரபிக் கடலுடன்

Suez Canal connects the Red Sea with the __________.

(a) Gulf of Aden (b) Gulf of Khambat

(c) Mediterranean Sea (d) Arabian Sea

## பகுதி - II / PART - II

**ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

21. தேசியம் என்றால் என்ன ?

What is nationalism ?

22. தொடக்ககால முக்கிய தேசியவாதிகளை கண்டறிக.

Identify the prominent early Indian nationalists.

23. கேப்டன் மோகன் சிங் எவ்வாறு இந்திய இராணுவத்தை ஏற்படுத்தினார் ?

How did Captain Mohan Singh organise the INA ?

24. ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன ?

What was the essence of the JVP committee's recommendations ?

**25.** நாடு விடுதலை அடைந்தபோது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து குறிப்பு வரைக.

Give an account of the conditions of the Indian economy at the time of independence.

**26.** பாஸ்டன் படுகொலை பற்றி நீங்கள் அறிந்ததென்ன ?

What do you know about Boston Massacre ?

**27.** பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.

Discuss the three Estates of the Ancient Regime.

**28.** அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.

Identify the espionage agencies of USA and USSR.

**29.** பனிப்போர் காலகட்டத்தைச் சேர்ந்த 'மறைமுக' போர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

Provide examples of Surrogate Wars in the Cold War Era.

**30.** பசுமைப்புரட்சி என்றால் என்ன ?

What do you mean by Green Revolution ?

## பகுதி - III / PART - III

**ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** வ.உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.

Write about the Swadeshi Venture of V.O.C.

**32.** தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்பு குறித்து எழுதுக.

Write about the contribution of Singaravelar to the promotion of trade unionism in South India.

33. இந்திய தேசிய காங்கிரசிலிருந்து சுபாஷ் சந்திர போஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை விளக்குக.

Explain the reasons for the removal of S.C. Bose from the INC.

34. பிரிவினையால் ஏற்பட்ட கடுமையான விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.

Highlight the tragic consequences of Partition.

35. இலத்தீன் அமெரிக்க விடுதலைக்கு சைமன் பொலிவரின் பங்களிப்பை சுருக்கமாய் வரைக.

Outline the contribution of Simon Bolivar to Latin American Independence.

36. 1789 -ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது'' – விளக்குக.

Long before the revolution of 1789, there was a revolution in the realm of ideas. Explain.

37. மெட்டர்னிக் சகாப்தத்தில் ஐரோப்பிய கூட்டு (Concert of Europe) எத்தகைய பங்காற்றியது என்பதனை விளக்குக.

What role did Concert of Europe play in Metternich Era ?

38. ரஷ்யாவில் 1905 -இல் நிகழ்ந்த புரட்சியின் காரணங்களையும், போக்கையும் ஆராய்க.

Examine the causes and consequences of the 1905 Revolution in Russia.

39. சீனாவில் நிகழ்ந்த பாக்ஸர் கிளர்ச்சி பற்றிய குறிப்புகளைத் தருக.

Attempt an account of Boxer Rebellion in China.

40. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.

Give a brief account of Suez Canal Crisis.

## பகுதி - IV / PART - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

Answer **all** the questions.

**41.** (அ) காங்கிரஸ் தோற்றம் மற்றும் அகில இந்திய அளவில் மக்களை திரட்டும் தொடக்கமாக செயல்பட்ட விதத்தை எழுதுக.

**அல்லது**

(ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் லால்-பால்-பால் ஆகிய மூவரின் பங்களிப்பை மதிப்பிடுக.

(a) Explain the formation of Indian National Congress and how did it act in the mobilisation of people on all India basis.

**OR**

(b) Evaluate the contributions of Lal-Bal-Pal triumvirate to Indian National Movement.

**42.** (அ) மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் துயர விளைவுகளைப் பற்றி விவாதிக்கவும்.

**அல்லது**

(ஆ) மாற்றத்தை விரும்புபவர்கள் - மாற்றத்தை விரும்பாதவர்கள் வேறுபடுத்துக.

(a) Discuss the causes and the tragic outcome of outbreak of Mappillai revolts in Malabar.

**OR**

(b) Point out the difference between pro-changers and no changers.

**43.** (அ) இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சம பங்காற்றியது எவ்வாறு ?

**அல்லது**

(ஆ) இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது ?

(a) Hindu nationalism, Muslim nationalism and Indian nationalism were equally responsible for the partition of the country. How ?

**OR**

(b) Why is the Royal Indian Revolt considered a glorious chapter in the history of Indian National Movement ?

44. (அ) இரண்டாம் உலகப் போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.

**அல்லது**

(ஆ) இந்தியாவின் ஐந்தாண்டு திட்டங்களைப் பற்றி கூறி, அவற்றின் சாதனைகளைப் பற்றி எழுதுக.

(a) The seeds for the Second World War were sowed in the treaty of Versailles. Discuss with reasons.

**OR**

(b) Explain about five year plans and its achievements.

45. (அ) சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ் மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது ?

(a) Explain the effects of the Reformation.

**OR**

(b) Why is Bismarck considered the true architect of a unified Germany ?

46. (அ) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியை பொறுத்தமட்டில் கடுமையான-தாகவும், அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது.
– இக்கூற்றினுக்கான ஆதார பின்புலத்தை உறுதிப்படுத்துக.

**அல்லது**

(ஆ) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை ? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க – ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.

(a) The treaty of Versailles was harsh and humiliating for Germany. Substantiate the statement.

**OR**

(b) What were the basic principles of India's foreign policy ? What role did Prime Minister Nehru play in organizing the Afro-Asian countries into a non-aligned movement ?

**47.** (அ) உலக வரைபடத்தில் மெகல்லன் சென்ற கடல்வழித் தடத்தை வரைந்து பின்வரும் இடங்களை குறிக்கவும்.

(i) மெகல்லன் ஜலசந்தி (ii) பிலிப்பைன்ஸ் தீவுகள்

**அல்லது**

(ஆ) 1900 முதல் 1950 வரைக்கான காலக்கோடு வரைந்து காந்தியடிகளின் சகாப்தம் குறித்த ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை குறிக்கவும்.

(a) In an outline world map, draw the route Magellan passed through and mark the following places.

(i) Magellan's Strait (ii) Phillipines Islands

**OR**

(b) Draw a time-line from 1900 to 1950 and mark any five events of Gandhian era of National Movement.

**- o O o -**